# சுதந்திரா கொள்கை விளக்கம்

# சுதந்திரா கொள்கை விளக்கம்

விவசாயிகள் நலன்

## விவசாயிகள்:

1. ஒரு லட்சம் வரையிலான விவசாய நிலக் கடன்களுக்கான வட்டி விகிதம் குறைக்கப்படும்
2. அனைத்து பயிர்களுக்கும் விவசாய காப்புறுதி வழங்கப்படும்.
3. மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டம் மூலமாக விவசாய தொழிலார்களின் ஊதியம் திருப்பி அளிக்கப்படும்
4. அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்படும்.
5. குளிர் பதனி மற்றும் குளிர் பதன கிடங்கிற்கு மாநில அரசாங்கத்தால் முன்னுரிமை அளிக்கப்படும்
6. கூட்டுறவு வேளாண்மை மற்றும் கூட்டுறவுச் சந்தைகள் சிறிய விவசாயிகளுக்கு அவர்களின் பண்ணை செயல்பாடுகளுக்கு ஒரு நியாயமான விலை பெற உதவுவதற்காக நடைமுறைகள் ஏற்படுத்தப்படும்..
7. அனைத்து தானியங்களின் இறக்குமதியும் தடைசெய்யப்படும் மற்றும் மாநிலத்தின் விவசாயிகள் மூன்று வருடங்கள் வரை வளர ஊக்கமளிக்கப்படுவார்கள்
8. மாநில அரசாங்கத்தில் பதிவுசெய்த சிறிய மற்றும் விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.
9. நீர்ப்பாசன திட்டங்கள் கட்டடங்களை உருவாக்குவதற்கும், மாநில நதிகளை இணைப்பதற்கும், கடலுக்குள் வீணடிக்கப்படும் நீரைச் சேமிக்க அணைகளை உருவாக்குவதற்கும் செயல்படுத்தப்படும்.
10. தரமான விதைகள் மற்றும் சொந்த விதை வங்கி அமைக்கப்படும்.
11. விவசாயிகள் தென்னைமர கள் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்படுவார்கள் மேலும் கள் உணவு பானமாக அறிவிக்கப்படும். அது ஒரு சாராய வகை பானமாக கூறப்பட்டதை முற்றிலும் நீக்கபடும்
12. எங்களை தேர்ந்தெடுத்தால் விவசாயிகளின் சிக்கல்களைப் பார்ப்பதற்கான ஒரு குழு அமைக்கப்படும்

    அல்லது 15 நாட்களில் விவசாயத் துறையில் நடைமுறை மாற்றங்களைச் செயல்படுத்துவதற்கு அறிக்கை கொண்டுவரப்படும்.

13. விவசாயம் செய்ய விரும்பும் நிலம் இல்லாத மக்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் குத்தகைக்கு அளிக்கப்படும்
14. எந்தவொரு விவசாய நிலமும் வேறு தொழில்களை அமைக்க கையகப்படுத்தப்படாது
15. மேலும் இந்த திட்டங்கள் தனியாருக்கு ஒப்பந்தம் அளிக்கப்படாது அரசாங்கத்தால் தானாகவே மேற்கொள்ளப்படும்
16. சூரிய ஒளி மின் உற்பத்தி ஏற்படுத்தி விவசாயிகள் அதிகம் சம்பாதிக்க ஊக்கம் அளிக்கப்படும்
17. அனைத்து உணவு எண்ணெய் இறக்குமதிகளிலும் மானியத்தை நிறுத்துவதோடு, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய், வேர்க்கடலை எள் விதை எண்ணெய்கள் மற்றும் பிற எண்ணெய்களுக்கான அனைத்து ஆதரவும் தரப்படும்.
18. இயற்கை விவசாயத்திற்கு 100 % சுற்று சூழல் ஆதரவு கிடைக்கும்
19. கால்நடை வளர்ப்பு மற்றும் நடமாடும் மருத்துவ உதவி அளிக்கப்படும்

## மகளிர் நலம்

1. பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் பெண் பாதுகாப்பான ஆணையம் உடனடியாக அமைக்கப்படும். நாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் அனைத்து பெண்கள் சம்பந்தமான புகார் மற்றும் வழக்குகளை இரண்டு வாரத்தில் முடித்து வைக்கப்படும்
2. ஆதரவுவற்ற, கல்வியறிவு இல்லாத மற்றும் கைம்பெண்களுக்கு அடிப்படை கல்வி அளிக்கப்படும்
3. பெண்கள் மீதான அனைத்து வழக்குகளும் 90 நாட்களில் குடும்ப நீதிமன்றங்களில் நீதி வழங்கப்படும்

## கல்விக் கொள்கைகள்

1. மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளும் ஒரே பாடத்திட்டங்களைக் கொண்டிருக்கும், கல்வியின் தரநிலை அனைத்து கிராமங்கள், அரசு மற்றும் கார்ப்பரேஷன் பள்ளிகளில் மேம்படுத்தப்படும்.
2. பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கு இலவச கல்வி அளிக்கப்படும்
3. மாணவர்கள் மருத்துவ படிப்புகளில் சேர நீட் தேர்வு எழுதப்படவேண்டும் மேலும் ஒன்றிற்கு மேற்பட்ட நுழைவுத்தேர்வை தடுக்கவும் , மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மன அழுத்தத்தை குறைக்கவும் +2 தேர்வு அகற்றப்படும்
4. மருத்துவ சேர்க்கைகளில் 10 % தகுதி அடிப்படையில் கிராமப்புற குழந்தைகளுக்கு அளிக்கப்படும்
5. எந்தவொரு தனியார் நீட் பயற்சி வகுப்புகளும் அனுமதிக்கப்படாது மற்றும் 8 ஆம் வகுப்பு முதல் குழந்தைகளுக்கு அரசாங்கம் பயற்சி அளிக்கும்
6. சாதி, மதம் சம்பந்தமான விருப்பத்தேர்வுகள் பள்ளி, கல்லூரி மற்றும் வேலைக்கான விண்ணப்பங்களில் இருந்து நீக்கப்படும்
7. மாணவர்களுக்கான கல்வி கடன்கள் எளிதில் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்படும் மேலும் வட்டி விகிதம் 6 சதவீதமாக குறைக்கப்படும்
8. பள்ளி மற்றும் கல்லூரிகளில் சாதி அடிப்படையில் அல்லாமல் குடும்ப பொருளாதார சூழ்நிலையின் அடிப்படையில் உதவி தொகை அளிக்கப்படும்.
9. அரசு மற்றும் கிராமப்புற பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு அரசாங்க வேலைவாய்ப்புகளில் 50% இடஒதுக்கீடு அளிக்கப்படும்
10. நன்கொடை கேட்கும் தனியார் நிறுவனங்கள் தீவிரமாக தண்டிக்கப்படும்.
11. அனைத்து மாணவர்களும் கல்வி நிறுவனங்களால் முழுமையாக காப்பீடு செய்யப்படும்.
12. விளையாட்டு செயல்பாடுகளுக்கு முன்னுரிமையை அளிக்கப்படும். அனைத்து மாநில விளையாட்டு வீரர்களுக்கு இலவச கல்வி மற்றும் வேலைவாய்ப்பு முன்னுரிமை அளிக்கப்படும்
13. விளையாட்டுக்கு என்று பாடத்திட்டம் உருவாக்கப்படும்
14. யோகா மற்றும் என்.சி.சி அனைத்து பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கட்டாயமாக்கப்படும்.
15. மருத்துவ மாணவர்கள் குறைந்தது மூன்று வருடம் கிராமப்புறங்களில் பணியாற்ற அறிவுறுத்தப்படும்

# மூத்த குடிமக்கள் நலம்

- தவறு செய்யும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து மூத்த குடிமக்களுக்கு வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்.
- பொருளாதாரதில் பின்தங்கிய முத்த குடிமக்கள் (60 வயதிற்கு மேற்பட்டவர்கள்) வருமான வரிச் சட்டத்தின் அடிப்படை வரம்புகளில் மருத்துவ காப்பீட்டுக்கு தகுதியுடையவர்களாக காக்கப்படுவார்கள்

# மீனவர்கள் நலம்

- அனைத்து கடலோர மீன் பிடிக்கும் கிராமங்களிலும் மீன்களை சேமிக்க குளிர் சேமிப்பு வசதி வழங்கப்படும்
- இயற்கை வேளாண்மை மற்றும் மீன்வளர்ப்பு ஊக்கப்படுத்தப்படும்
- அனைத்து மீனவர்களுக்கும் உயிர் காப்பீடு செய்யப்படும்

# வரிகள்

எரிபொருள் விலையில் மதிப்பு கூட்டப்பட்ட வரி குறைக்கப்படும் எரிபொருளின் விலையில் ரூபாய் 20 குறைக்கப்படும்.

# லஞ்ச ஒழிப்பு

- அனைத்து ஊழல் வழக்குகளும் 30 நாட்களுக்குள் முடிக்கப்படும்.
- தகவல் அறியும் உரிமை சட்டம் அனைத்து துறைகளிலும் செயல்படுத்தப்படும்
- லோக்யுக்தா அமைப்பு ஏற்படுத்தி அனைத்து ஊழல் வழக்குகளும் 30 நாட்களுக்குள் வழக்குப்பதிவு செய்து மற்றும் 30 நாட்களில் முடித்துவைக்கப்படும்.
- ஊழல் குற்றம் புரிந்தவர்களை விசாரணை முடிந்தவுடன் குற்றம் நிரூபிக்கப்படும் வேளையில் அரசாங்க வேலையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படும்
- கீழ் மற்றும் உயர் நீதிமன்றத்தில் ஊழல் என்பது கடுமையான தண்டனையுடன் கையாளப்படும்.
- அனைத்து நில பதிவுகள் டிஜிட்டல் மயமாக்கப்படும் மேலும் பினாமி நிலம் வைத்து இருப்பதை ஒழிக்கப்படும்
- தொலைக்காட்சி, மின் விசிறி போன்ற இலவசங்கள் அளிக்கப்படாது
- எங்கள் கட்சியில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரது வருமானமும் முதற்கட்டமாக தொகுதி நலனுக்கு பயன்படுத்தப்படும்.

## தொழில் நிறுவனங்கள் நலம்

- *அனைத்து நுண்ணிய, சிறிய , நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அவர்களின் பிரச்னைகள் அறிந்து அதை சரி செய்ய குழு அமைக்கப்படும்*
- ***வணிகத்தை எளிதாக்குவது அனைத்து மற்றும் தெளிவுபடுத்தல்களும் 48 மணிநேரத்தில் வழங்கப்படும்.***
- ***மாநிலத்தில் உள்ள முதலீட்டாளர்களுக்கு ஆதரவை வழங்க அனைத்து தொழில்துறை நிறுவனங்களும் மேம்படுத்தப்படும்***
- ***அனைத்து நுண்ணிய, சிறிய , நடுததர நிறுவனங்களுக்கு உதவி அளிக்கப்படும்***
- ***அனைத்து மூடப்பட்ட ஆலைகள் மற்றும் தொழில்கள் ஊழல் செய்யும் இடை தரகர்கள் மற்றும் புரோக்கர்கள், வாங்குவதற்கு அனுமதிக்கப்படாது, தொழில்களின் புதுப்பிப்பு மட்டுமே அனுமதிக்கப்படும்***
- ***நூற்பாலைகள், வார்ப்பகம், தொழில்நுட்ப பூங்காக்கள் அவர்களின் தேவைகள் குறித்து ஆலோசிக்கப்படும்***

## சிறு வர்த்தகர்கள் நலம்

- ***சிறு வர்த்தகர்கள் பதிவுசெய்தால், வங்கிகளில் - ரூபாய் ஐந்து லட்சம் வரை காப்பீடு செய்யப்பட்டு கடன் வசதிகள் வழங்கப்படும்.***

## நிலம் மனை விற்பனை

- ***அனைத்து குடிமக்களும் எள்ளித்தகள் நிலங்கள் வாங்குவதற்கு நில பதிவு வரி 11% லிருந்து 2% ஆக குறைக்கப்படும்,***
- ***வீடு இல்லாத குடிமக்களுக்கு வீடு சட்டப்படி ஏற்படுத்தி கொடுக்கப்படும்***
- ***ஒவ்வொரு குடிமகனின் முதல் வசிப்பிடமும் வீட்டு வரி விலக்கு அளிக்கப்படும்.***

## திருநங்கைகள் நலம்

- *அனைத்து திருநங்கைகளுக்கும் அவர்களின் கல்வித்தகுதியின் அடிப்படையில் அரசாங்க வேலைகள் வழங்கப்படும்.*

## அரசு வேலை

- *அனைத்து அரசாங்க வேலைகளிலும் 50% அவர்களின் கல்வித் தகுதியை அடிப்படையாகக் கொண்ட பெண்களுக்கு வழங்கப்படும்.*
- *ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே அரசு வேலை வழங்கப்படும்.*

- எல்லா மீதமுள்ள விண்ணப்பங்களும் 48 மணி நேரத்தில் செயல்படுத்தப்படும்.

## மின்சாரத் துறை

- மின் உற்பத்தியை அதிகப்படுத்தி அதன் கட்டணத்தை குறைக்க ஏற்பாடு செய்யப்படும்
- சூரிய ஒளி மின் உற்பத்தியை ஊக்கமளிக்கப்படும். தற்போதைய உற்பத்தி முதலீட்டார்களுக்கு லாபகரமாக இல்லாததால் புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்.
- மாநில மின்சார வாரியம் முற்றிலும் புதுப்பிக்கப்படும்.

## மருத்துவ மற்றும் சுகாதார சேவைகள்

- மருத்துவமனை /மருத்துவ சேவைகள் பொருளாதாரரீதியாக பின்தங்கிய மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.
- தனியார் மருத்துவமனைகள் தங்களது படுக்கை அளவுகளில் குறைந்தபட்சம் 10% இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ நேர்மையான பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்,
- அனைத்து விபத்து மற்றும் மருத்துவ காப்பீட்டுகளுக்கு 10 வேலை நாட்களில் தீர்வு அமைக்கப்படும்
- சித்தா, ஆயுர்வேதம் மற்றும் யுனானி போன்ற இந்திய மருத்துவம் அலோபதி மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றுக்கு சமமான முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- மருத்துவ சுற்றுலாவிற்கு முழு ஆதரவு தரப்படும்

வன பாதுகாப்பு

- வன பாதுகாப்பு அமைப்பு அமைக்கப்படும்

## காவலர் படை

- காவலர் படைகள் மற்றும் காவலர் சீர்திருத்தங்கள் நவீன மயமாக்கப்படும்
- கடலோர பாதுகாப்பு படைக்கு ஊக்கமளிக்கப்படும்
- மாநிலத்திற்கு எதிரான அனைத்து தீவிரவாத செயல்களும் தீவிரமாக கையாளப்பட்டு ஒடுக்கப்படும்.

## பாதுகாப்பு படை

- அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவ இருக்கைக்கான ஒதுக்கீட்டில் 1% பாதுகாப்புப் படைகளின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்படும்.
- பாதுகாப்புப் படைகளின் குடும்பங்களுக்கு 5 ஏக்கர் குத்தகைக்கு குறைந்தது 3 வருடங்களுக்கு

கொடுக்கப்படும் . மேலும் வருடங்கள் நீட்டிக்கப்படும்

- அனைத்து பாதுகாப்பு படையினரின் நல்வாழ்விற்கு ஏற்பாடு செய்யப்படும்

## கோவில்

- இந்து சமய அற நிலையத்துறை விசாரணை செய்த கோவிலில் திருடிய சிலைகள் மற்றும் கோவில் நிலங்கள் சம்பந்தமாக குற்றம் செய்தவர்கள் தீவிரமாக தண்டிக்கப்படுவர்
- அனைத்து கோவில்களும் அரசாங்க இந்து சமய அறநிலைய துறையிலிருந்து விடுவிக்கப்படும்
- மத சுற்றுலா ஏற்படுத்தி ஆலயங்களின் வருவாயை அதிகரிக்க ஊக்கமளிக்கப்படும்

## சுற்றுலா துறை

- கடலோர நகரங்கள் ஊக்கமளிக்கப்பட்டு எல்லா கடற்கரைகளையும் மேம்படுத்தப்படும்
- எண்ணூர் முதல் கன்னியாகுமரிக்கு படகு சேவை ஏற்படுத்தப்படும்
- **அனைத்து கிராம மற்றும் நகர் பாதைகள் இரு வழி அல்லது நான்கு வழி பாதையாக மாற்றி விவசாய சுற்றுலாவிற்கு ஊக்கமளிக்கப்படும்**

## மண்டல போக்குவரத்து அலுவலகம்

- அனைத்து சாலை வரிகளும் இன்றைய கட்டண விகிதத்திலிருந்து குறைக்கப்படும்.
- வாகனங்களின் காப்பீடு மாநில அரசாங்கத்தின் கீழ் வரும், மேலும் எந்தவொரு தனியார் துறை காப்பீடும் ஊக்கமளிக்கப்படாது
- மாநில அரசு அதன் வருங்கால வைப்பு நிதி மற்றும் இ.எஸ்.ஐ. முறையை ஊக்கப்படுத்தப்படும்
- அனைத்து குடிமக்களின் காப்பிடும் மாநில அரசு மூலம் அளவான கட்டணத்துடன் ஏற்பாடு செய்து தரப்படும்
- RTO புரோக்கர்கள் மூலம் ஊழல் இருக்காது அவ்வாறு இருந்தால் தீவிரமாக கையாளப்படும்

## வேலை வாய்ப்பு

- அனைத்து வேலையில்லாத மக்களும் மாநில வேலைவாய்ப்பு வாரியத்துடன் பதிவு செய்ய வேண்டும்.

- அனைத்து அரசுத் துறைகளிலும் பயன்படுத்தப்படாத அனைத்து நிதிகளும் வெளிக்கொண்டு வரப்படும். .

## பஞ்சாயத்து ராஜ் :

- நிர்வாகத்தை பரவலாக்குகிறது மற்றும் பஞ்சாயத்து நிலை நிர்வாகத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்..
- மற்ற அனைத்து நிர்வாகங்கள் மற்றும் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு முதல் தகவல்களை பெற்று அனைத்து சிக்கல்களையும் சரி செய்யப்பட்டு நல்ல வாழ்க்கை முறையை ஏற்படுத்தவும் தொழில் செய்யவும் ஏற்பாடு செய்யப்படும்

- எங்கள் கட்சி ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பல்வேறு துறை நிபுணர்களை இணைத்து உயர்ந்த சட்டப்பூர்வ கவுன்சில் அமைக்கப்படும்

- பல்வேறு கூட்டமைப்புடன் கலந்தாலோசித்து மேலும் பல திட்டங்கள் அறிவிக்கப்படும்

# சுதந்திரா கட்சியின்

சார்பாக உங்கள் மேலான கருத்துக்களை வரவேற்கிறோம்